**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No. 489/2025</u>**

**<u>வழக்கு சாட்சி PW-1</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆறுமுகம் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | வேலு | தொழில் | : | கூலி |
| கிராமம் | : | மேலக்கடையநல்லூர் | வயது | : | 50 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 06.05.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் மேலக்கடையநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். எதிரி காசிதர்மத்திற்கு அருகில் உள்ள ஒரு தோப்பில் 4 வருடங்களுக்கு முன்பு என்னை வேலைக்கு ஒருநாள் அழைத்து சென்றார். நான் 10 நாட்கள் அங்கு வேலை பார்த்தேன். அவ்வாறு வேலை பார்த்த வகையில் எதிரி எனக்கு ரூ.1400/- சம்பளம் தரவேண்டியிருந்தது. நான் சம்பவத்திற்கு 1 வாரத்திற்கு முன்பு தோப்பில் வைத்து ரூ.1400/- சம்பள பாக்கியை கேட்டேன். அவர் தருகிறேன் என்று சொன்னார். நான் அவ்வாறு சம்பளத்தை தரவில்லை என்றால் அவர் பார்வையிட்டு வரும் நிலத்தில் உள்ள வாழைகளை வெட்டி போடுவேன் என்று சொன்னேன். பின்னர் ஒரு நாள் தேதி, மாதம் எனக்கு ஞாபகம் இல்லை . இரவு சுமார் 7.00 மணியளவில் எதிரி மது வாங்கிக்கொண்டு வந்து ரூ.50/- கொடுத்து என்னை கிளாஸ் மற்றும் தண்ணீர் வாங்கி வர சொல்லி அனுப்பிவிட்டார். பின்னர் நான் கிளாஸ் மற்றும் தண்ணீரை வாங்கி வந்து மீதி பணத்தையும் எஸ்எம் பல்க் வைத்து திருப்பி கொடுத்தேன். அந்த இடத்தில் வைத்து

நானும், எதிரியும் மது அருந்தினோம். மது அருந்தும்போது எனக்கு வாடை வந்தது. எனக்கு வாயில் இருந்து நுரை தள்ளியது. அப்போது எதிரி இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு போய்விட்டார். என்னை அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றார்கள். பின்னர் தென்காசி அரசு மருத்துவனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பிவைத்தார்கள். பின்னர் திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் மேல்சிகிச்சையில் 18 நாட்கள் இருந்தேன். எதிரி எனக்கு மதுவில் விஷ மருந்தை கொடுத்து குடிக்க செய்தார் என்ற விவரம் தெரிந்துக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அந்த புகார் மனுவை நான் காவல் நிலையத்தில் வைத்து கொடுத்தேன். அந்த புகார் மனு அசாஆ.1 ஆகும். நான் 10 நாட்கள் கழித்துதான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.05.19 12:54:55 +0530